## பெருநகர சென்னை மாநகராட்சி
## செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 142** **நாள்: 13.09.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம் வார்டு–56ல் உள்ள மீரா லப்பை தெருவை ஆக்கிரமித்து அமைக்கப்பட்ட குடியிருப்புகள் அகற்றப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப.அவர்கள் தெரிவித்துள்ளார்.**

= = = = =

பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு–56 மீரா லைப்பையில் உள்ள தெருவை ஆக்கிரமித்து அமைக்கப்பட்ட குடியிருப்புகள் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் அகற்றப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

வார்டு–56க்குட்பட்ட மீரா லப்பை தெருவானது 180 மீட்டர் நீளமும், 8 மீட்டர் அகலம் கொண்டது, இத்தெருவில் 20க்கு மேற்பட்ட ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டு 08.03.2012 அன்று தாக்கீது வழங்கப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து ஆக்கிரமிப்பாளர்கள் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, வழக்கு நிலுவையில் இருந்து வந்தது.

ஆக்கிரமிப்பு முழுவதும் அகற்றிட மாண்புமிகு சென்னை உயர்நீதி மன்ற ஆணையின்படி 02.08.2018 அன்று உத்தரவிட்டதற்கிணங்க 12.09.2018 அன்று காவல் துறையின் ஒத்துழைப்புடன், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு தெரு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**